5th International Research Symposium – 2015

# *IntSym 2015*

## Emerging Trends and Challenges in Multidisciplinary Research

Proceedings

07th and 08th December 2015

**South Eastern University of Sri Lanka (SEUSL)**

**Chief Editor**

Dr. A M. Muzathik

**Co-editors**

Mr. M.H. Thowfeek

Dr. P. Elango

Dr. K. Komathiraj

Ms. M.M. Mashroofa

Mr. M.M. Fazil

Dr. N.W.B. Balasooriya

Dr. A. Jahfer

**ISBN: 978-955-627-063-1**

Published By:
South Eastern University of Sri Lanka
University Park
Oulvil 32360
Sri Lanka

© South Eastern University of Sri Lanka 2015
This work is subject to copyright. All the rights are reserved by the publisher. Nothing in this work may be reproduced in any form, any part or as a whole, without express a written permission from the publisher.

Disclaimer
The views expressed remain the responsibly of the named authors and do not necessarily reflect those of publisher.

# வட இலங்கையில் போர்த்துக்கேயர் - ஒல்லாந்தர் பின்பற்றிய மதக்கொள்கை: ஒப்பியல் வரலாற்று நோக்கு

க. அருந்தவராஜா, மங்களரூபி சிவகுமார்

வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
arunn.msu.gmail.com

**ஆய்வச் சுருக்கம்**
இக்கட்டுரை போர்த்துக்கல், ஒல்லாந்தர் ஆகிய ஏகாதிபத்தியவாதிகள் இலங்கையின் வட புலத்தில் பின்பற்றிய மதக்கொள்கை பற்றிய ஒரு ஒப்பீட்டு ரீதியான வரலாற்று ஆய்வாகும். 16ம் நூற்றாண்டு வரை தனியான ஆட்சி முறையின் கீழ் தமிழ் இராச்சியமாகக் காணப்பட்ட இப்பிரதேசம் 16ம் நூற்றாண்டுக்குப் பின்னர் காலனித்துவ வாதத்திற்குட்பட்டது. யாழ்ப்பாணம் உட்பட தீவகம் முழுவதும் இவ்விரு பகுதியினரதும் (காலனித்துவவாதிகள்) தங்களது சமயத்தினைப் பரப்புவதற்கு கையாண்ட வழிமுறைகள் எல்லாமே பொதுமையானதாகும். ஆனால் அவர்களின் செயற்பாடு வட புலத்தில் வெற்றியளிக்கவில்லை. இவ்வாய்வானது வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் பார்க்கப்படுகின்றது. இது முதலாம், இரண்டாம் நிலை தரவு மூலாதாரங்களைப் பயன்படுத்தி அளவுசார், பண்புசார் மற்றும் ஒப்பியல் முறைகளை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**Keywords:** கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து, சுதேச மதங்கள், பலாத்காரம், தலையழிவுக் கொள்கை

## அறிமுகம்

இலங்கைத் தீவினது வரலாற்றில் தனித்துவமான பண்பாட்டு அலகுகளையும் பாரம்பரியங்களையும் கொண்ட பிராந்தியமாக யாழ்ப்பாணக் குடாநாடு இனங்காணப்படுகின்றது. சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற பண்டைய இலக்கியங்களில் நாகநாடு, நாகதீபம் எனக் குறிப்பிடப்படுகின்ற இப்பிரதேசத்தில் வாழ்ந்த தமிழ் மக்கள் இந்து சமயத்தினைப் பின்பற்றுபவர்களாகவே வாழ்ந்து வந்துள்ளனர். இவர்கள் கி.பி 8ஆம் நூற்றாண்டிலிருந்து தமக்கென அரசொன்றினை தோற்றுவித்து வாழ்ந்து வந்தமைக்கான ஆதாரங்களும் கிடைத்துள்ளன *(புஸ்பரட்ணம், 2003)*. இந்தத் தமிழ்அ ரசு யாழ்ப்பாண அரசு எனவும் அவ்வரசிற்கு உட்பட்ட வட இலங்கைப் பிராந்தியமானது யாழ்ப்பாண இராச்சியம் எனவும் அழைக்கப்பட்டது. அவ்வகையில் இவ்வரசானது கி.பி 16ஆம் நூற்றாண்டுவரை அரசியல், பொருளாதார, சமூக, கலை, பண்பாட்டுத் துறைகளில் தனித்துவமான கட்டமைப்புக்களைக் கொண்டு காணப்பட்டதெனலாம்.

இக்காலத்திற்குப் பின்னதாக வட இலங்கையானது போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் அவர்களைத் தொடர்ந்து ஆங்கிலேயரான ஐரோப்பியர்களது காலனித்துவ ஆட்சிக்குள் காலத்திற்குக் காலம் அகப்பட்டுத் தன்னுடைய சுதந்திரத்தினை இழந்தது. அந்தவகையில் கி.பி 1556இன் பின்னராக இந்து மதத்திலும் இந்துப் பண்பாட்டிலும் இரண்டறக் கலந்திருந்த யாழ்ப்பாணத்தவருக்குப் போர்த்துக்கேயர் சலுகைகளை வழங்கியும் சில சந்தர்ப்பத்தில் பலாத்காரத்தினைப் பின்பற்றியும் தமது மதப்பரப்புரைகளை மேற்கொண்டனர் *(அருந்தவராஜா, 2014)*. இவர்களைத் தொடர்ந்து வட இலங்கையில் தமது செல்வாக்கினைப் பதித்த ஒல்லாந்தரது மதப்பரப்பு நடவடிக்கைகளும் ஏறத்தாழ இவ்வாறே அமைந்தன. 1796இல் ஆங்கிலேயர் கால் பதிக்கும் வரை ஒல்லாந்தரது செல்வாக்கே வட இலங்கை உள்ளிட்ட நாடு முழுவதும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. போர்த்துக்கேயர் ரோமன் கத்தோலிக்க மதத்தினைச் சேர்ந்தவர்களாகவும் ஒல்லாந்தர் புரட்டஸ்தாந்து சமயத்தினைச் சார்ந்த கல்வின் என்பவருடைய கருத்துக்களை ஏற்ற ஒல்லாந்தச் சீர்திருத்த திருச்சபையினைச் சேர்ந்தவர்களாகக் காணப்பட்டனர் *(Silva,1981)*.

இவர்களது மத நடவடிக்கைகளின் காரணமாக வட பகுதியில் காணப்பட்ட இந்து, இஸ்லாமிய மதங்கள் பேராபத்தினைச் சந்திக்க வேண்டியிருந்தது. இவர்கள் இரு பகுதியினரும் தமது மதங்களே உண்மையான மதங்கள் எனவும் பிற மதங்கள் தவறான வழியினையும் அஞ்ஞானம், மூடநம்பிக்கைகளையேதான் போதிக்கின்றன எனவும் கூறினர். இவர்கள் இருபகுதியினர்களும் தமது சமயங்களைப் பின்பற்றுவதன் ஊடாகவே ஆன்ம ஈடேற்றத்தினை அடையலாம் என்றார்கள் *(சிவசாமி, 2014)*. முதலில் போர்த்துக்கேயரே வட இலங்கையில் கால் பதித்தமையினால் ஏராளமான இந்து ஆலயங்கள், கட்டடங்கள், மசூதிகள் என்பனவற்றினை அழித்து அப்பொருட்களைக் கொண்டு கோட்டைகளையும் தேவாலயங்களையும் அமைக்கின்ற பணிகளில் ஈடுபட்டனர். ஆனால் பின்வந்த ஒல்லாந்தரோ சுதேச மதங்களைவிட போர்த்துக்கேயரையும் கத்தோலிக்கத்தினையுமே அதிகளவில் எதிரியாகப் பார்த்தனர். போர்த்துக்கேயரிடம் சமய நோக்குடன் அரசியல் நோக்கமும் இணைந்திருந்தது *(Perera, 1948)*. அவர்களது காலத்தில் மதப்பிரச்சாரம்

மன்னரது மேற்பார்வையிலேயே நடைபெற்றது. ஒல்லாந்தரிடம் போர்த்துக்கேயரைப் போன்று சமய ஆர்வமானது மிகுதியாகக் காணப்படவில்லை. வர்த்தக நோக்கமே அவர்களிடம் எல்லாவற்றினையும் விஞ்சி நின்றது.

இருசாராரும் மதப்பரப்புரையில் பொதுவான வழிமுறைகளைக் கையாண்டனர். சுதேச மொழிகளைக் கற்றல், தேவாலயங்களையும் பாடசாலைகளையும் அமைத்தல், மதப்பரப்புரைக்கு கல்வியினை ஒரு கருவியாகப் பயன்படுத்துதல், சமயப் பிரசுரங்களை வெளியிடுதல், வைத்தியசாலைகளை அமைத்தல், மக்களது சமூக, பொருளாதார நிலைகளை உயர்த்தப் பாடுபடுதல் என்பவையே அவை. பல சந்தர்ப்பங்களில் பலாத்கார நடவடிக்கைகளிலும் இவர்கள் ஈடுபட்டனர். இரு பகுதியினரும் சாதி முறைகளை மீறிச் செயற்பட்டாலும் கூட அதனைத் தன்வயப்படுத்தத் தவறிலர் *(சிவசாமி, 2014)*. எனவே இவர்களது காலம் முடிவடைந்து ஆங்கிலேயர்களது காலத்தின் ஆரம்பத்துடனேயே இந்து, இஸ்லாமிய மதங்கள் மீளவும் தலைகாட்ட ஆரம்பித்தன. கட்டாயத்தின் பேரிலோ அல்லது விருப்பமின்றியோ மதம் மாறியோர் மீளவும் இந்து மத்தினைத் தழுவ ஆரம்பித்தனர்.

**ஆய்வுப் பிரச்சினை**

கடந்த காலங்களில் நிகழ்ந்த சம்பவங்களினைப் பற்றி ஆராய்கின்ற சமயங்களில் அதற்கான முதல் நிலைத்தரவுகளைப் பெறுவதில் பிரச்சினைகள் பல ஏற்படுவது வழமையாகும். அந்தவகையில் யாழ்ப்பாணத்தினைப் பற்றிய பல தகவல்கள், குறிப்புக்கள், கடிதங்கள் போர்த்துக்கல், நெதர்லாந்து போன்ற நாடுகளிலேதான் அதிகளவில் காணப்படுகின்றன. அவையும் அந்தந்த நாடுகளின் மொழியிலேயே எழுதப்பட்டுள்ளமை மற்றொரு சிக்கலாகும். மேலும் இலங்கையிலும் இலங்கை தொடர்பாகப் பிற நாடுகளிலும் வைக்கப்பட்டிருந்த தகவல்கள் பல தற்காலத்தில் அழிந்துவிட்டன. மேலும் யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது காலக் கட்டடங்கள், நினைவுச் சின்னங்கள் பலவும்கூட தற்காலத்தில் சிதைவடைந்த நிலையிலேதான் காணப்படுகின்றன. இதனால் இத்தகைய ஒப்பியலாய்வு முயற்சியில் ஈடுபட்டபோது மேற்கூறப்பட்ட பிரச்சினைகளையும் சவால்களையும் நாமும் சந்திக்க வேண்டியிருந்தது.

**நோக்கங்கள்**

வட இலங்கையில் போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் காலப்பகுதி தொடர்பாகப் பல்வேறு தகவல்கள் கிடைத்தாலும்கூட அவை தொகுக்கப்பட்ட நிலையில் அக்காலப்பகுதியிலேற்பட்ட மதப்பரப்புரை தொடர்பான ஒப்பியல் ஆய்வுகளாக அமையவில்லை. மேலும் இவற்றினது முக்கியத்துவமும் எடுத்துக்காட்டப்படவில்லை. அத்துடன் இவர்களது மதப்பரப்புரைகளின் தன்மைகள், அதன்போது அவர்கள் எதிர்கொண்ட சவால்கள், இவை அக்காலப்பகுதியில் வாழ்ந்துவந்த இந்து, இஸ்லாமிய மக்கள் மத்தியில் ஏற்படுத்திய தாக்கங்கள் என்பனவற்றினை வெளிப்படுத்துவதும் ஆய்வினது துணைநோக்கங்களாக உள்ளன. மேலும் இத்தகைய ஆய்வின் மூலமாகக் கிடைக்கின்ற தகவல்களை ஆவணப்படுத்தி எதிர்கால ஆய்வாளருக்கு உதவுவதனையும் இவ்வாய்வானது தனது நோக்கங்களிலொன்றாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் பார்க்கப்படுகின்றது. இது முதலாம், இரண்டாம் நிலை தரவு மூலாதாரங்களைப் பயன்படுத்தி அளவுசார், பண்புசார் மற்றும் ஒப்பியல் முறைகளை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வகையில் இவ்வாய்விற்கான முதலாம் நிலைத்தரவுகளாக சமகாலத்தில் மதப்பரப்புரையின் பொருட்டு இங்கு வந்த குருமார்கள் எழுதிய குறிப்புக்கள், கடிதங்கள், நூல்கள், விஸ்பன், நெதர்லாந்து சென்று யாழ்ப்பாணந் தொடர்பான தகவல்களைப் பெற்று எழுதப்பட்ட நூல்கள், கட்டுரைகள் யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்ற நினைவுச் சின்னங்கள், இங்குள்ள அழிந்த, அழியாத நிலையில் காணப்படுகின்ற கட்டடங்கள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளாக இத்தகைய முதல் நிலைத்தரவுகளை அடிப்படையாக வைத்துப் பிற்பட்ட காலங்களில் எழுதப்பட்ட நூல்கள், கட்டுரைகள், இணையத்திலிருந்து பெறப்பட்ட தரவுகள் மற்றும் இத்துறையில் துறைபோன ஆராய்ச்சியாளர்கள் மற்றும் அறிஞர்களின் கருத்துக்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

பொதுவாக இலங்கையில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்கால மத நடவடிக்கைகள் பற்றி நூல்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் என்பன வெளிவந்திருந்தாலும் ஒப்பியல் அடிப்படையில் அதுவும் யாழ்ப்பாணத்தினை மையமாகக்கொண்டு மத அடிப்படையில் வெளிவந்த படைப்புக்கள் குறைவாகவே உள்ளன. வி.சிவசாமியின் *'இலங்கையில் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் பின்பற்றிய மதக்கொள்கை"* என்ற ஆராய்ச்சிகட்டுரை, Fernao De Queyroz Dila The *Temporal and Spiritual Conquest of Ceylon*, K.M.De Silva vOjpa *A History of Sri Lanka,* S.G. PereratpDila *History of Ceylon*, Tikiri Abeyasinghe tpd; *Portuguese rule in Ceylon*, S.Arasaratnam எழுதிய *Dutch power in Ceylon*, அண்மையில் வெளிவந்த

முருகர் குணசிங்கத்தினுடைய '*இலங்கையில் தமிழர்*', செ.கிருஸ்ணராசாவினுடைய '*இலங்கை வரலாறு*' போன்ற படைப்புக்கள் இவ்விடயமாக வெளிவந்த சில முன்னோடியான இலக்கியங்கள் எனலாம். இவற்றில் வி. சிவசாமியினுடைய 'இலங்கையில் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் பின்பற்றிய சமயக்கொள்கை' என்ற ஆராய்ச்சிக் கட்டுரை தவிர்ந்த ஏனையவை யாவும் நேரடியாக இவ்வாய்விற்கு உதவியாக அமையவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. ஏனைய படைப்புக்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக மதப்புரை தொடர்பான தகவல்களைத் தருகின்றனவே தவிர இருவரது மதப்பரப்புரையின் ஒப்பியலாய்வாக அவை அமையவில்லை.

**சுருக்கமும் முடிவும்**

யாழ்ப்பாணம் உள்ளிட்ட இலங்கை முழுவதுமே இவர்கள் இரு பகுதியினரும் தங்களது சமயத்தினைப் பரப்புவதற்கு கையாண்ட வழிகள் எல்லாமே பொதுப்பட ஒன்றாகவே காணப்பட்டன. இருப்பினும் இவர்களால் மதப்புரை தொடர்பாக யாழ்ப்பாணத்தில் அதிகளவிற்கு எதையும் சாதிக்க முடியவில்லை. இவர்களது ஆட்சி முடிவிற்கு வந்தவுடன் பலரும் தமது சொந்த மதங்களுக்கு மாற முற்பட்டனர். ஒப்பீட்டளவில் போர்த்துக்கேயரே இவர்கள் இருவரிலும் ஓரளவிற்கு இவ்விடயமாகச் சாதித்தனர். அதற்கு இரு காரணங்கள். ஒன்று இவர்களது வருகை காலத்தால் முற்பட்டிருந்தமை. மற்றையது கத்தோலிக்க மதம் சுதேச மத வழிபாட்டு முறைகளை ஒத்திருந்தமை. எவ்வாறாயினும் சுதேச மதங்களால் இவர்களது ஆட்சிக் காலத்தில் தலைதூக்க முடியவில்லையென்பதே உண்மை. இவ்விடயமாக ஆதாரங்கள் கிடைக்கின்றபோது மதப்புரைக்கான ஒப்பியல் ஆராய்ச்சியானது மேலும் விரிவடையலாம்.

**உசாத்துணை நூல்கள்**

*அருந்தவராஜா, க. (2014), போர்த்துக்கேயர்காலப் பண்பாடு - யாழ்ப்பாணக் குடாநாட்டினைச் சிறப்பாக் கொண்ட ஆய்வு. இலங்கை வரலாறு - கட்டுரைத் தொகுப்பு. (அருந்தவராஜா,க-ப.ஆ), அஞ்சு வெளியீட்டகம்: நல்லூர்.*

*குணசிங்கம், மு. (2008), இலங்கையில் தமிழர். எம்.வி. வெளியீடு: சிட்னி.*

*சிவசாமி, வி. (2014), இலங்கையில் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் பின்பற்றிய சமயக்கொள்கை. இலங்கை வரலாறு - கட்டுரைத் தொகுப்பு. (அருந்தவராஜா,க-ப.ஆ), அஞ்சு வெளியீட்டகம்: நல்லூர்.*

*புஸ்பரட்ணம், ப. (2003), தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு, பவானி பதிப்பகம்: யாழ்ப்பாணம்.*

Arasaratnam, S. (1958), The Dutch power in Ceylon 1658-1687. New Delhi.

Perera, S.G. (1948), History of Ceylon. Lake House: Colombo.

Silva, K.M.De. (1981), A History of Sri Lanka. Oxford University press: Delhi.

Queyorz, Fernao, De. (1930), The Temporal and Spiritual Conquest of Ceylon. Colombo.